

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் தூய்மைப்பணியாளர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து நேற்று (24.07.2025) நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர். திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் தூய்மைப் பணிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் துணைத் தலைவர் செ.கனிமொழி பத்மநாபன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர் செ. ரமேஷ். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### தூய்மைப் பணியாளர் நல வாரியத் தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி முன்னிலையில்

# சேலத்தில் 159 தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், ஜூலை 25-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் 159 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி முன்னிலையில் சேலம் மாவட்டத்தில் தூய்மைப்பணியாளர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டம் நேற்று (24.07.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர் செ. ரமேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி முன்னிலையில் சேலம் மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு என செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் நேற்று (24.07.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அனைத்து விதமான பொதுமக்களும் அரசின் திட்டங்கள் மூலம் பயன்பெற்று வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டுமென பல்வேறு நல வாரியங்களை உருவாக்கி தந்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தற்பொழுது அனைத்து வாரியங்களும் செம்மையாக நடைபெறும் வகையில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக சேரும் அனைவருக்கும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை, விபத்து மரணம், இயற்கை மரணம், ஈமச்சடங்கு, விபத்தினால் உடல் ஊனம், திருமணம், மகப்பேறு உதவித்தொகைகள் விடுதியில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்கள், விவசாயிகள், மாணவ மாணவியர்கள், தொழிலாளர்கள், நெசவாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயனடையும் வகையில் சிறப்பான ஆட்சியினை நடத்தி வருகிறார்கள். தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியின்போது மிகுந்த கவனத்துடனும், விழிப்புணர்வுடனும் பணியாற்றிட வேண்டும். அரசால் வழங்கப்பட்டுள்ள அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும், முழுமையாக உபயோகப்படுத்தி பாதுகாப்புடன் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலன் காத்திடும் வகையில் 2007 ஆம் ஆண்டு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தினை ஏற்படுத்தி தந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் 2021 -ஆம் ஆண்டு ஆட்சி பொறுப் பேற்றவுடன் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கென தனியாக அரசு அலுவலகத்தை உருவாக்கி தந்து ஆண்டிற்கு ரூ.15 கோடி நிதி ஒதுக்கி இவ்வாரியம் சிறப்பாக செயல்பட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தூய்மைப்பணியாளர்களுக்கு அரசின் அனைத்து விதமான நலத்திட்ட உதவிகளும் விரைந்து சென்று சேர்த்திடும் வகையில் தூய்மைப்பணியாளர்களின் நலவாரியத்தின் தலைவராக என்னை நியமித்தமைக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். கொரோனா காலகட்டத்தில் தனது உயிரையும் பொருட்படுத்தாமல் நமது இன்னுயிரை காக்க பாடுபட்ட அனைத்து தூய்மைப்பணியாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்கும் தூய்மைப் பணியா ளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கிராமப்புறங்களில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்கிட அரசிற்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் மூலம் சமூக நலத்திட்ட உதவிகள், தூய்மைப் பணிபுரிவோர் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு, விபத்து மற்றும் இயற்கை மரணம், ஈமச்சடங்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் கண் கண்ணாடி ஆகியவற்றுக்காக உதவித்தொகை கடந்த காலங்களில் தமிழ்நாடு அளவில் மொத்தம் 9,649 நபர்களுக்கு ரூ4.38 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், சேலம் மாவட்டத்திற்கு 178 நபர்களுக்கு ரூ.23.20 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று சேலம் மாவட்டத்தில் 30.06.2025 வரை தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் 1974 ஒப்பந்த பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டை (SMART CARD) வழங்கப்பட்டுள்ளது. தூய்மைப் பணியாளர்கள் தங்களது குழந்தைகளை வருங்காலத்தில் நல்ல கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்து அவர்களை வாழ்க்கையில் வெற்றியாளர்களாக உருவாக்கிட வேண்டும் இவ்வாறு தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி அவர்கள் பேசினார்.

இதனைத்தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், தமிழ்நாடு தூய்மைப்பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் 159 நபர்களுக்கு தூய்மை பணியாளர்களுக்கான நல வாரிய அட்டை, கல்வி உதவித்தொகை, ஈமச்சடங்கு நிதியுதவி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் துணைத் தலைவர் திருமதி.செ. கனிமொழி பத்மநாபன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர் செ. ரமேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஜெயக்குமார், மாவட்ட மேலாளர் (தாட்கோ) சு.சக்திவேல் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி 49வது வட்டத்தில் பாகம் 34ல்சிரங்கம்மாள் தெருவில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை வீடு வீடாக நடைபெற்றபோது மாவட்ட பொறுப்பாளரும் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. சேகர் அறிவுத்தலின்படி சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரிம். இரா.மூர்த்தி. பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் முன்னிலையில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் அ.சுபேர் கான் ஆய்வு செய்தார். வட்டகழக பொறுப்பாளர் க.கலைசெல்வன் வட்ட கழக நிர்வாகிகள் எம்.நரசுமணி, அ.குமார் கே.ஆர்.கோபிநாத், ஜி.கோதண்டன், எஸ்.சங்கர், ஜி. விநாயகமூர்த்தி, ப.நிதிஷ்குமார், ஜி.ரேவதி, எஸ்.முத்துக்குமார், சதஷ்குமார், சரவணன், யோகேஸ்வரன், நவீன் குமார் மற்றும் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி நகராட்சி காந்தி மைதானத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை, அரசு தலைமை கொறாடா கா.ராமச்சந்திரன் நேற்று (24.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கோத்தகிரி நகர்மன்ற தலைவர் ஜெயகுமாரி உட்பட பலர் உள்ளனர்




செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அரசினர் மருத்துவமனையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் அன்று மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் கோரிக்கையை ஏற்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ரூபாய் 7 லட்சம் மதிப்பிலான மின்சார ஜெனரேட்டரை வழங்கி இயக்கி வைத்தார். அதுபோது நகர மன்ற தலைவர் மலர்விழி குமார், நகரக் கழகச் செயலாளர் கே. குமார் மற்றும் மன்ற உறுப்பினர்கள் மருத்துவர்கள் உடன் இருந்தனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 155 வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்

சென்னை, ஜூலை 25 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 155 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (24.7.2025) திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 72, எம்.எஸ் முத்து நகர் (போலீஸ் பூத் அருகில்) கன்னிகாபுரம். 2) வட்டம் 72 அ, டாக்டர் அம்பேத்கர் நகர் (பூங்கா அருகில்) புளியந்தோப்பு, அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ் கான், கா.ராஜ்முகமது, வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா. ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், எஸ். புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# 'உங்களுடன்ஸ்டாலின்' திட்டமுகாம்!

## இன்று 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது!

சென்னை,ஜூலை.25-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (25.07.2025) மாதவரம் மண்டலம், வார்டு-31ல் பி.ஆர். எச். சாலையில் உள்ள எம். பி. திருமணம் & கன்வென்ஷனல் மையம், இராயபுரம் மண்டலம், வார்டு-62ல் சிந்தாதரிப்பேட்டை, மேற்கு கூவம் ஆறு சாலையில் உள்ள எஸ்.கே.எம். மஹால், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-69ல் ஜம்புலிங்கம் பிரதான சாலையில் உள்ள பத்மேடு நாடார் சத்திரம், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-112ல் புலியூர், 2வது பிரதான சாலையில் உள்ள டிரஸ்ட்புரம் விளையாட்டுத் திடல், பெருங்குடி மண்டலம், வார்டு-189ல் பள்ளிக்கரணை, துலுக்காத்தம்மன் கோவில் பிரதான சாலையில் உள்ள எஸ்.எஸ். மஹால், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-196, ஒக்கியம்பேட்டை, மாதா கோயில் தெருவில் உள்ள கிரியேட்ஸ் பார்ட்டி ஹால் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொது மக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலேசியா தளபதி பேரவை சார்பில் மு.க.முத்து இரங்கல் கூட்டம்!

கோலாலம்பூர், ஜூலை 25 -

மலேசியா தளபதி பேரவை. சார்பாக. மலேசியாவில்.ஜொகுர்பாரில். முத்தமிழ் அறிஞர். கலைஞர். அவர்களின் மூத்த மகன். முக. முத்து அவர்களுக்கு இரங்கல் கூட்டம் மலேசியா தளபதி பேரவை செயலாளர்.ஹச்.எம்.ஜெய்னுதீன். தலைமையில் நடைபெற்றது.

அமுல்ராஜ்.. புருஷோத்தமன். சஞ்சய். ராஜ்குமார். ஜியாவுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில். இளைஞர் அணி. சாகுல் ஹமீது. பிரம்ம குண்டம் அய்யனார். ஐஸ் அகமதுல்லா. அப்துல்லா. மூர்த்தி. செந்தில்நாதன். இந்திய யூனியன் முஸ்லிம் லீக். நிர்வாகி. அக்பர் பாஷா. இதயத்துல்லா. சலீமுதீன். வாழ்வுரிமைக் கட்சி. நிர்வாகி. தயாளன். செல்வகுமார். ரபீக். தமுமுக. நிர்வாகி. அப்துல் ரகுமான். சேட்டு. நிஜாமுதீன். ஜெய்னுதீன். விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகி. லாரன்ஸ். அன்புச் செல்வம். மூர்த்தி. கலீல் ரகுமான். நவாஸ். கூட்டணி கட்சி நிர்வாகிகள். பெரும் திரளாக கலந்து கொண்டு இதய அஞ்சலி செலுத்தினார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் அறிவுறத்தலின் பேரில் விச்சூர் ஊராட்சி பாகம் எண் 311 இல் சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரன் எம்.ஏ.பிஎல் கலந்து கொண்டு உறுப்பினர் வீடு வீடாக சென்று மக்களுடன் உரையாடி கழக அரசின் சாதனைகள் எடுத்துக் கூறி உறுப்பினர்களை சேர்த்தனர் இதில் கழக நிர்வாகிகள் பல கலந்து கொண்டனர்.